பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 11 ஞாயிற்றுக்கிழமை 23.02.2025 கதிர் 107

# 58 பாதாள உலகக் குழுக்கள் 1,400 பேர் உறுப்பினர்கள்

## பதில் பொலிஸ் மா அதிபர் தகவல்

நாட்டில் 58 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களும், அவர்களைப் பின்தொடர்பவர்களில் 1,400 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மட்டும் 17 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகக் கூறிய பதில் பொலிஸ் மா அதிபர், ஆயுதங்களால் தாக்கி கொலை செய்யப்பட்ட ஐந்து சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களில் 17 சம்பவங்கள் குறித்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

சில சம்பவங்களில் பொலிஸார் மற்றும் முப்படைகளின் உறுப்பினர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புப்பட்டுள்ளனர் எனவும், அதன்படி, அவர்களில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தன்னை அந்நியப்படுத்திக் காட்டும் நிலைப்பாட்டை அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றார். கட்சி ஒரு நிலைப்பாட்டை எடுத்தால் அதனோடு தனக்கு இணக்கமில்லை என்பதைப்போலக் காட்டிக்கொள்கிறார். இப்போதும் புதிய அரசமைப்பு விவகாரத்தில் ☞ 2

## வெப்பக் காலநிலை குறித்து எச்சரிக்கை

பல மாவட்டங்களில் நிலவும் மிகவும் வெப்பமான வானிலை கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் ☞ 8

## நாகைக்கான கப்பல் சேவை மீண்டும் நேற்று தொடக்கம்



காங்கேசன்துறை – நாகப்பட்டினம் துறைமுகம் இடையிலான இந்திய இலங்கை பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையானது நேற்று மீண்டும் தொடங்கியது.

நாகப்பட்டினத்தில் இருந்து காலையில் பயணத்தை தொடங்கிய ☞ 8

## அரசியல் நியமனங்களினாலேயே பொலிஸ் அதிகாரிகளுக்கு மாற்றம்

### பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

அரசியல்வாதிகளின் தேவைகளுக்கேற்ப நியமனம் வழங்கப்பட்டிருந்தமையினாலேயே அண்மையில் 183 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இனி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நியமனத்தில் அரசியல் தலையீடுகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியங்க வீரசூரிய தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் இடமாற்றம் வழங்கப்பட்ட 183 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் கடந்த ஆட்சி காலத்தில் அரசியல் தலையீடுகளுடன் நியமனங்களைப் பெற்றுக் கொண்டவர்களாவர். குறித்த பிரதேசங்களிலுள்ள அரசியல்வாதிகளே இவ்வாறான நியமனங்களை வழங்கியிருக்கின்றனர்.

இதன் ஊடாக தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே அவர்களது எதிர்பார்ப்பாகும். இதனால் பொது மக்கள் அரசியல்வாதிகளிடம் சென்று அதன் பின்னரே பொலிஸாரிடம் செல்லும் நிலை காணப்பட்டது. தற்போது அவ்வாறு இல்லை. இதுவரைக் காலமும் அரசியல்வாதிகளாலேயே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஆனால் நாம் தற்போது அதற்கென வழிமுறையொன்றை உருவாக்கி அதற்கமையவே இடமாற்றங்களை வழங்கியிருக்கின்றோம். ☞ 2

## ராஜபக்சக்களின் இரகசியங்களை காக்கவே கஜ்ஜா படுகொலையா?

### விசாரிக்கவேண்டும் என்கிறார் எதிர் தரப்பு எம்.பி.

ராஜபக்சக்களின் இரகசியங்கள் வெளியாகும் என்ற அச்சத்தில் மித்தெனிய கஜ்ஜா படுகொலை செய்யப்பட்டார் என்று மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. இந்த ☞ 8

## நீதியும் ஆளும் அதிகாரமுமே தேவை ஏமாற்றினால் விளைவு மோசமாகும்

### சாணக்கியன் எம்.பி. சபையில் எச்சரிக்கை

படுகொலைசெய்யப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதியும், எம்மை நாம் ஆளும் அரசியல் தீர்வும் வேண்டும் என்பதில் இருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை தாமதப்படுத்துவது இந்த நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும். மக்களை ஏமாற்றினால் கோட்டபய ராஜபக்சவைக் காட்டிலும் மிக மோசமான விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் ☞ 8

## கொலைகளை முடிவுக்கு கொண்டுவர உறுதியான திட்டத்தை முன்வைக்குக

### எதிர்க் கட்சித் தலைவர் கோரிக்கை

கொலை கலாசாரத்தை முடிவுக்கு கொண்டுவந்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நாளை முறையான வேலைத்திட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இடம்பெற்றுவரும் கொலை கலாசாரத்துக்கு முடிவில்லாமல் இருக்கிறது. இவ்வாறான நிலைமையில் தேசிய பாதுகாப்பு மக்களின் ☞ 8

## நாட்டை சீரழிக்கும் நடவடிக்கைகள் விரைவில் இல்லாதொழிக்கப்படும்

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

நாட்டைச் சீர்குலைக்கும் நோக்கில் எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும், அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் விரைவில் இல்லாதொழிக்கப்படும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.பி. செனவிரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ☞ 2

## நோர்வூட் பிரதேச செயலகத்தை இடம்மாற்றம் செய்யவேண்டாம்

### சபையில் ஜீவன் வலியுறுத்து

நோர்வூட் பிரதேச செயலகத்தை ஹட்டன் பகுதிக்கு மாற்ற ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகிறது. அவ்வாறு செய்தால் அங்குள்ள இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்படுவார்கள். அதனால் இந்த தவறை ஆளும்தப்புச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ☞ 2

## புலிகள் உட்பட 15 அமைப்புகளுக்கு இந்த ஆட்சியிலும் மீண்டும் தடை

தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட 15 பயங்கரவாத அமைப்புகளைத் தடை செய்யும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தடைசெய்யப்பட்ட அமைப்புகள், பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் மீண்டும் மீண்டும் நிதி வழங்கின என்றும் கூறப்படுகிறது.

அதன்படி, அந்த அமைப்புகளின் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப்பட்டுள்ளன. மேலும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 222 நபர்களின் பட்டியலும் இந்த அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

1. தமிழீழ விடுதலைப் புலிகள்
2. தமிழர் புனர்வாழ்வு அமைப்பு
3. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
4. உலக தமிழர் இயக்கம்
5. நாடு கடந்த தமிழீழ அரசு
6. உலக தமிழர் நிவாரண நிதியம்
7. தலைமையகக் குழு
8. தேசிய தௌஹீத் ஜமாஅத்
9. ஜமாதே மிலாதே ஈப்ராஹிம்

☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# இறுதி ஊர்வலம் மீது மோதியது வாகனம்

## ஒருவர் உயிரிழப்பு; 5 பேர் காயம்

யாழ்ப்பாணத்தில் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயமடைந்த நிலையில் யாழ் . போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் மத்தியை சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் (வயது 30) என்பவரே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பகுதியில் அண்மையில் உயிரிழந்தவரின் இறுதி கிரியைகள் வெள்ளிக்கிழமை நடைபெற்று தகன கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் - கைதடி வீதியில் உள்ள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. வீதியால் மிக வேகமாக வந்த வாகனம் திடீரென ஊர்வலம் மீது மோதி தள்ளிவிட்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களை அங்கிருந்தவர்கள் மீட்டு , யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய ஐவரும் வைத்திய சாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் , தப்பி சென்ற வாகனத்தினை கண்காணிப்பு கமராக்களின் காணொளிகள் அடிப்படையில் தேடி வருகின்றனர்.

## இனி இது .....

கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறான பதிலைத்தான் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கட்சிக்குள் தெரிவுசெய்யப்பட்ட தலைவராக இருந்த நிலையில் அந்தப் பொறுப்பைத் தற்றுணிபோடு ஏற்று ஆற்றத் தவறிய அவர், கட்சிக்குள் அரசியல் குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதன் மூலம் தனது அரசியலை மட்டும் முன்னகர்த்திவிடலாம் என்று கருதுகின்றார் போலும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இதே குழப்ப நிலையைத் தோற்றுவித்து பயனடைந்ததன் விளைவாக அவர் தொடர்ந்தும் அதே பாணியைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். ஆனால், அது தமிழ் அரசுக் கட்சியையே முற்றாக அழித்துவிடும் என்பது குறித்து அவருக்குக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. அவர் தமிழ்க் காங்கிரஸ் என்கிற மற்றொரு தோணியிலும் கால் வைத்திருக்கிறார் என்பதால் தமிழ் அரசுக் கட்சியின் அழிவு குறித்துக் கவலை கொள்ளமாட்டார் போன்றே தோன்றுகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தை முன்வைத்து நாடாளுமன்றத்தில் உள்ள வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமை இடத்தைப் பிடிப்பதற்கு கஜேந்திரகுமார் எடுத்த முயற்சிக்கு தமிழ் அரசுக் கட்சி முட்டுக்கட்டை போட்டுவிட்டது. நாடாளுமன்றத்தில் இப்போது இருக்கும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே மும்மொழி அறிவு, சட்டப் புலமை, நீண்ட கால அரசியல் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் சுமந்திரனின் இடத்தை தன்னால் இட்டுநிரப்ப முடியும் என்று கருதி அவர் இந்த முயற்சியில் இறங்கியிருக்கக்கூடும். அதில் தவறும் இல்லை. அந்த முயற்சிக்கு அவர் தகுதியானவர் இல்லை என்றும் சொல்லிவிடமுடியாது. ஆனால், நாடாளுமன்றத்திலேயே மூன்றாவது பெரிய கட்சியும் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளிலேயே ஆகப் பெரிய கட்சியுமான தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரனே கஜேந்திரகுமாரின் இந்த முயற்சிக்கு முதலில் குறுக்கே விழவேண்டியவர். ஆனால், தனது தகுதி குறித்தும், மொழி ஆளுமை குறித்தும் அவருக்கு இருக்கும் சந்தேகத்தினாலோ என்னவோ கஜேந்திரகுமாருக்கு வழிவிட்டு, அவரின் கீழ் பயணிக்க சிறீதரன் தயாராக இருக்கிறார் என்பதாகவே இதுவரையிலான அவரது நகர்வுகளில் இருந்து தெரிகிறது.

இந்தப் பின்னணியிலேயே புதிய அரசமைப்பு தொடர்பில் கஜேந்திரகுமார் விடுத்த அழைப்புக்கு தமிழ் அரசுக் கட்சித் தலைவர் ஒரு பதில் வழங்கியிருந்த நிலையில், அதற்கு மாறாக இப்போது ஒரு பதிலை வழங்கியிருக்கிறார் சிறீதரன். 'வீரகேசரி' பத்திரிகைக்கு அவர் வழங்கிய கருத்தில், "தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டுநிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இப்போது நாங்கள் தான் பசியுடன் இருக்கிறோம். பசியுடன் இருப்பவர்கள் தானே என்ன தேவை என்று கேட்கமுடியும்?" என்று தெரிவித்திருக்கிறார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்து கஜேந்திரகுமார் கட்சிக்கு வழங்கிய கடிதத்திற்குப் பதிலளித்து வெள்ளிக்கிழமை (21) இலங்கைத் கட்சித் தலைவர் சிவஞானம் அளித்த பதில் குறித்து உங்கள் கருத்து என்ன என்ற கேள்விக்கே சிறீதரன் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

"புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப்போக்கைக் கடைப்பிடிப்பதாலும், அதற்கான முன்வரைவு எதனையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாக இருக்கும் எனக்கருதவில்லை. உரிய நேரம் வரும்போது இதுபற்றிக் கலந்துரையாடலாம்'' என்று சிவஞானம் பதிலளித்திருந்தார்.

"சுமார் 80 வருடங்களாக தமிழர்களாகிய நாம் உரிமைப்பசியுடன் வாழ்கிறோம். அந்த உரிமைப்பசிக்காக நாம் செய்த தியாகங்கள் அளப்பரியவை. அதற்காக ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கிறோம். எனவே எம்முடைய உரிமைப் போராட்டமும், தமிழர் அரசியலும் உரிமைக்காகப் போராடி மாண்ட உயிர்களின் மீதும், சாம்பல் மேட்டின் மீதும்தான் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இற்றைவரை உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழினத்தின் தேவை மற்றும் கோரிக்கை என்னவென்பதை நாங்கள் தான் வெளிப்படையாகக் கூறவேண்டும். மாறாக ஆளும்தரப்பு கூறும் வரை நாங்கள் காத்திருக்கமுடியாது. இவ்விடயத்தில் நாம் (தமிழ் அரசுக் கட்சி) மாத்திரமன்றி, தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல கட்சிகளும் இணைந்து ஒரு பொதுநிலைப்பாட்டுக்கு வரவேண்டும்" என்று சிறீதரன் தெரிவித்திருக்கிறார்.

சிறீதரனிடம் எனக்கிருக்கும் ஒரே கேள்வி, இத்தகைய ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வராமல் கடந்த 15 ஆண்டுகளாக உங்களைத் தடுத்தது எது? அல்லது அப்படித்த தடுத்த காரணிகளோடு நீங்கள் ஏன் அமைதியாக ஒட்டிக்கொண்டிருந்தீர்கள்? என்பது மட்டும்தான்.

.............................

பாதாள உலகக்குழு தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பில் சிங்கள ஊடகங்கள் தொடர்ந்து பல தகவல்களை வெளியிட்டுவருகின்றன என்பதை ஏற்கனவே சொல்லியிருக்கின்றேன்.

இது அப்படிப்பட்ட மற்றொரு தகவல்:

கொலை செய்யப்படுவதற்கு முன்பு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர், வெளிநாட்டில் இருந்து கொலையைத் திட்டமிட்ட கொமாண்டோ சலிந்த என்ற நபரை வாட்ஸ்அப் மூலம் தொடர்பு கொண்டார் என்பதைப் பொலிஸார் தற்போது கண்டறிந்துள்ளனர்.

கொமாண்டோ சலிந்த, 'நீ வேலையைச் செய்' என்றார். ''வெளியே எல்லாம் சரி. பயப்படாதே. சுடு. எல்லாம் சாதகமாகவுள்ளது. பயப்படாமல் சுடு" எனத் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், "உள்ளே பிரச்சினை இல்லையே?" "நான் உள்ளே இருக்கிறேன்" என்றார்.

''எதுவும் இல்லை, நீ சுடுவதற்குத் தயாராகு'', ''முடித்துவிடு. எல்லாம் சரியா இருக்கு" என்றார் கொமாண்டோ சலிந்த. துப்பாக்கிச் சூடு நடத்தியவர், "அப்படியானால் பொலிஸார்?" என்று கேட்டிருக்கிறார்.

காலை 9.48 மணிக்கு, கொமாண்டோ சலிந்த , ''எல்லாம் சரியாக உள்ளது. நீ வேலையைச் செய்" என்று கூறியுள்ளார். பின்னர், காலை 9.54 மணிக்கு, துப்பாக்கிச் சூடு நடத்தியவர், கொமாண்டோ சலிந்தவுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்திருந்தார்.

''அவன் இறந்துவிட்டானா?'' என்று சலிந்த கேட்டார். "இறந்துவிட்டான்" என்று கொலையாளி பதிலளித்தார்.

''அருமை'' என்று பதிலளித்த பிறகு, கொமாண்டோ சலிந்த "நீ என் உயிர்" என்று பதிலளித்தார். "ஏன் இப்படி கூறுகிறீர்கள், நீங்கள் தான் எனக்கு உணவளித்து தந்தை போல் கவனித்தீர்கள். நீங்களே என் உயிர்" எனக் கொலையாளி பதிலளித்துள்ளார்.

சகோதரி இன்னும் அங்கேயேதான் இருக்கிறாள். "நான் இங்கே இருக்கிறேன்" என்று துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்னும் கொஞ்ச நாட்களுக்கு ஊடகங்களுக்கு இந்தப் பரபரப்புக்குக் குறைவிருக்காது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## 58 பாதாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறினார்.

தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த பிறகு நடத்தப்பட்ட விசாரணைகளில், 13, ரி -56 ரக துப்பாக்கிகள், 15 ரிவால்வர்கள், 21 கைத்துப்பாக்கிகள், 12 துப்பாக்கிகள், 7 ரிப்பீட்டர்கள், 805 உள்ளூர் துப்பாக்கிகள் மற்றும் பிற துப்பாக்கிகள் நான்கும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். குற்றவாளிகள் மற்றும் துப்பாக்கிகள் குறித்து தகவல் அளிக்கும் பொதுமக்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

1997 என்ற இலக்கம் ஊடாக இதுபோன்ற தகவல்களை வழங்க முடியும் என்றும் ரி-- 56 ரக துப்பாக்கி குறித்த தகவல்களை வழங்கினால் 10 இலட்சம் ரூபா வரை பணப் பரிசில் வழங்கப்படும் எனவும் கூறிய பதில் பொலிஸ்மா அதிபர், தகவல் வழங்குபவர்களின் இரகசியம் பேணப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

## நாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக் கும்பல்களுக்கு இடையே பல மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அந்தக் குற்றங்களில் தொடர்புடைய அனைத்து சந்தேகநபர்களையும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் கைது செய்ய முடிந்துள்ளதாகவும் கூறினார்.

இந்தச் சம்பவங்கள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக் கும்பல்களுக்கு இடையே மோதல் சூழ்நிலைகள் உருவாக்கியுள்ளதைக் காட்டுகின்றன. இதற்குப் பல்வேறு காரணங்கள் பங்களிக்கின்றன. அரசியலும் இதில் ஈடுபட்டுள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல், புதுக்கடை சம்பவத்திலும், மிந்தெனிய மூன்று கொலைகளிலும், குற்றவாளிகள் பற்றிய தகவல்களைப் பெற்றவுடன் பொலிஸார் உடனடியாகச் செயல்பட்டு, சில மணி நேரங்களுக்குள் கொலையாளியைக் கண்டுபிடித்து கைது செய்ய முடிந்தது. அண்மைக் காலங்களில், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதில் பொலிஸார், முப்படையினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் விசேட அதிரடைப் படையினரின் உதவி பெரிதும் பங்களித்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இந்தக் குற்றவாளி கும்பல்களின் தலைவர்கள் மற்றும் குற்றவாளிகள் பலர் வெளிநாடுகளில் இருந்து செயல்பட்டு வருவதாகக் கூறிய அவர், இந்த சந்தேகநபர்களை இலங்கைக்குக் கொண்டு வந்து சட்டத்தின் முன் நிறுத்த இராஜதந்திர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாதாள உலக நடவடிக்கைகளை ஒடுக்கும் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அவர், சமீபத்திய நாட்களில் சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னர் வெளியிடப்படாத அம்சங்களை வெளிக்கொணர இது உதவியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த விசாரணைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் குழுக்கள் இருப்பதாகக் கூறிய அவர், நாட்டை சீர்குலைக்கச் செயல்படும் குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்றும் வலியுறுத்தினார்.

## நோர்வூட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளரும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவு திட்ட விவாதத்தில் உரையாற்-றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி ஆளும்தரப்பு உள்ளூராட்சி சபைகளை பிரிப்பதற்குத் தீர்மானித்திருந்தது. அதேநேரம் காலிக்கும் நுவரெலியாவுக்கும் மாவட்ட செயலகங்களை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனால் அதனை அவர்களால் செயற்படுத்த முடியவில்லை. நாங்கள் ஆளும்தரப்பை எடுத்தபோது நான் அமைச்சராக இருந்து ஆரம்பமாக நோர்வூட் பிரதேசத்தில் பிரதேச செயலகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

ஏற்கனவே இதனை இங்கு அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது. அந்த பகுதியில் 2இலட்சத்து 14ஆயிரம் பேர் வாழ்ந்து வருகிறார்கள்.அங்கு பிரதேச செயலகம் வரவேண்டும் என்பது அனைவரதும் கோரிக்கையாக இருந்தது. அதனால் நாங்கள் அதனை அமைக்க நடவடிக்கை எடுத்தாமே;. ஆனால் அந்த பிரதேச செயலகத்தை ஹட்டன் ரயில் நிலையம் அமைந்திருக்கும் மேல் பகுதிக்கு மாற்றப்போவதாக தற்போது பிரச்சினை ஒன்று எழுந்துள்ளது. அவ்வாறு இடம்பெற்றால் அது மிகப்பெரிய தவறாக அமையும்.

நோர்வூட் பிரதேச செயலகத்தில் போதுமான ஆளணி இல்லாமல் இருப்பதே அதனை மாற்ற வேண்டும் என்று தெரிவிப்பதற்கு பிரதான காரணமாகும். இதில் குறித்த பிரதேச செயலகத்தை ஹட்டன் பகுதிக்கு இடமாற்றி, இரண்டரை இலட்சம் மக்களை சிரமத்துக்கு உள்ளாக்குவதா அல்லது பிரதேச செயலகத்துக்கு தேவையான ஆளணியை பெற்றுக்கொடுப்பதா இலகுவான விடயம் என்பதை ஆளும்தரப்புப் பார்க்கவேண்டும்.

இந்த விடயம் காரணமாக அந்தப் பகுதி மக்கள் மிகவும் விரக்தியில் இருக்கின்றனர். மலையக மக்கள் பாரியளவில் இந்த ஆளும்தரப்புக்கு வாக்களித்தவர்கள். அதனால் ஆளும்தரப்பு நோர்வூட் பிரதேச செயலகத்தை மாற்றவேண்டும் என்றால் ஆரம்பமாக அந்தப் பகுதி மக்களிடம் கருத்துக் கேட்கவேண்டும்.

அதேபோன்று அங்குள்ள வியாபாரிகள், சிவில் அமைப்பினர் புத்திஜீவிகளிடம் கேளுங்கள் அப்போது அரசாங்கத்துக்கு உண்மை நிலை தெரியவரும். எனவே அரசாங்கம் இந்த தவறை செய்ய கூடாது என்றே நான் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வு தகவல், மக்களின் நிலைப்பாடு, கடந்த கால நடத்தைகள், செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அறிக்கை பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் என்றார்.

# வடமாகாணத்திலுள்ள திறமையான வீரர்களை தேசியமட்ட அணிகளில் உள்வாங்கவேண்டும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. கோரிக்கை



வடமாகாணத்தில் உள்ள திறமை மிக்க வீரர்களை தேசிய மட்ட அணிகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு துறை அமைச்சுககான உப குழுக் கூட்டம் நாடாளுமன்ற கட்டத் தொகுதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் -

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சுக்கானஉபகுழுக்கூட்டம்நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அதில் உறுப்பினராக நான் இருப்பதால் எமது பிரதேசத்தின் விளையாட்டுத் துறை தொடர்பாக பல விடயங்களை முன்வைக்க முடிந்தது. இது தொடர்பாக பல விடயங்களை சுட்டிக் காட்டினேன். ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கிற்கு தேவையான ஆளணி, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அதனை பெற்றுக் கொடுக்க வேணடும் என கோரிக்கை முன்வைத்தேன்.

அத்துடன், பிரதேசத்தில் காணப்படும் விளையாட்டு கழகங்கள் தொடர்பாக சிறந்த அவதானத்தை செலுத்த வேண்டும் எனவும் வடமாகாணத்தில் உள்ள திறமை மிக்க வீரர்களைத் தேசிய மட்ட அணிகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினேன்.

போதைப் பொருள் பாவனை, சமூக வலைத்தளங்களில் இருக்கும் இளைஞர், யுவதிகளின் அவதானத்தை நல்ல வழியில் கொண்டு வர விளையாட்டு துறை காணப்படுகின்றது. அதனை ஊக்குவிக்க வேண்டும். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக கவனம் செலுத்துவதாகவும், எழுத்து மூல முன்மொழிவுகளை வழங்குமாறும் இளைஞர், விவகார விளையாட்டு துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார். அதற்கு அமைவாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் விளையாட்டுத்துறை சார்பாக ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் எனக்கு எழுத்து மூலமாக தந்தால் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். 100

# நிந்தவூர் பிரதேச முக்கியஸ்த்தர்களுடன் மக்கள் காங்கிரஸினர் கலந்துரையாடல்!

(முபீன், அபு அலா)

கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகள், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் செயற்பாடுகள் தொடர்பில் நிந்தவூர் பிரதேச முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலொன்று கடந்த 13 ஆம் திகதி நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.





கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கடந்த பொதுத் தேர்தலின் பின்னரான கட்சியின் அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் நலன்சார் செயற்பாடுகள் மற்றும் நாடாளுமன்ற உரைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கட்சியின் நிந்நதவூர் பிரதேச முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்களௌனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சுத்தமான இலங்கை செயற்திட்டத்தின்கீழ் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு

(சுபேசன்)

சுத்தமான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த திங்கட்கிழமையா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டது.



பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் ததர்மரட்ணம் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார்.



# உழவு இயந்திரத்தில் சிக்கி இராணுவ சிப்பாய் இறப்பு

(கேதீஸ்)



திம்புள்ள பத்தனை இராவணாகொட பிரதேசத்தில் உழவு இயந்திரத்தின் சுழல் கலப்பையில் மோதி இராணுவத்தில் பணிபுரியும் நபர் ஒருவர் வியாழக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜயபாகு கந்த, மஹாவலிகம ஹவன்வெள பிரதேசத்தில் வசித்து வந்த கொட்டகேபிட்டிய பகுதியைச் சேர்ந்த தசந்த சந்திக ஹேரத் (வயது 32) என்ற திருமணமான இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் இராணுவ சேவையிலிருந்து விடுமுறையில் வீடு திரும்பியதும், உழவு இயந்திரத்தில் தனது வயலை தயார் செய்வதற்காக உழவு இயந்திரத்தை ஸ்டார்ட் செய்தபோது எதிர்பாராதவிதமாக உழவு இயந்திரத்தின் சுழலும் கலப்பையில் சுற்றப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் சுழலும் கலப்பையில் சுற்றப்பட்டிருந்த நிலையில், ஹற்றன் நீதிவான் வந்து சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்னும் ஆழமான தேடல் தேவை

**நாட்டில் 58 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களும், அவற்றைப் பின்தொடர்பவர்களில் 1,400 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பதில் காவல் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். அதிர்ச்சியளிக்கும் இந்தத் தரவு சட்டம் ஒழுங்குக் காவலர்களின் செயற்றிறன் என்ன என்பதைத் தொடர்ந்தும் கேள்விக்குள்ளாக்குகின்றன.**

**இத்தனை குழுக்களும் ஆட்களும் சேரும் வரைக்கும் காவல்துறையினரும் புலனாய்வாளர்களும் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பதும் அச்சத்தை விளைவிக்கும் கேள்விகள். காவல்துறையினரின் ஆதரவும் அனுதாபமும் இன்றி இந்தக் குற்றக் கும்பல்கள் இவ்வளவுதூரம் பெருகியிருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பது நிச்சயம். அதற்கு இப்போது கைது செய்யப்பட்டுவரும் சில காவலர்களும் சாட்சி. இருப்பினும் காவல்துறையில் இதுவரையில் பாதாள உலகத் தொடர்பு காரணமாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் அனைவரும் கடைநிலைப் பணியாளர்களே, உயரதிகாரிகள் அல்லர்.**

**காவல்துறையின் உயர்மட்ட ஆதரவு இன்றி இந்தளவு குற்றக்கும்பல்களும் பெரிகியிருக்க வாய்ப்பேயில்லை என்பதைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவேண்டும். இந்த ஆண்டு மட்டும் 17 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகக் கூறிய பதில் காவல் மா அதிபர், ஆயுதங்களால் தாக்கி கொலை செய்யப்பட்ட ஐந்து சம்பவங்களும் அவற்றில் அடக்கம் என்கிறார்.**

**சில சம்பவங்களில் பொலிஸார் மற்றும் முப்படைகளின் உறுப்பினர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புப்பட்டுள்ளனர் எனவும், அதன்படி, அவர்களில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். ஆகமொத்தத்தில் காவல்துறையினரின் ஆதரவுடனேயே இந்தக் குற்றக் கும்பல்கள் பெருகியுள்ளன என்பது நிச்சயம். முப்படைகளையும் சேர்ந்தவர்களுக்கும் இந்தக் குற்றக் கும்பல்களுக்கும் தொடர்பு இருப்பதும் ஏற்கனவே அம்பலமாகி இருக்கின்றது. எனவே அனைத்துப் படைத்துறைகளிடையேயும் இது தொடர்பில் ஒரு மிகச் சிறந்த வலையமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்ற வலையமைப்பு முழுமையாக உடைக்கப்படாத வரையில் இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வராது.**

**இதற்கிடையே கொட்டாஞ்சேனையில் தமிழ் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்கள் உடனடியாகவே காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கொலையும் பாதாள உலகக் குழு ஒன்றின் கட்டளைக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டது என்று அவர்கள் இருவரும் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வழக்கம் போல, அவர்கள் ஆயுதங்களைமறைத்துவைத்திருந்த இடத்திற்குஅழைத்துச் சென்றபோது, ஆயுதங்களை எடுத்து காவலர்களைச் சுடமுயன்றார்கள், அதனால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்று காவல் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். இது அரச படைகளின் நீதிக்குப் புறம்பான கொலைகளின் தொடக்கமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றன. அல்லது இந்தக் குற்றக் கும்பல்களுக்கும் படையினருக்கும் இடையிலான தொடர்புகள் மேலும் வெளிப்பட்டுவிடுமோ என்கிற அச்சத்தில் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமோ என்கிற சந்தேகமும் ஏற்படுகின்றது.**

**தேசிய பாதுகாப்பு பலமாக உள்ளது என்று விளக்கமளித்துக்கொண்டிருக்கலாம் ஆளும்தரப்பு இது விடயங்களிலும் கவனம் செலுத்தி, சட்டம் ஒழுங்கை திறம்பட நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் இதுவே மக்களின் அறச்சீற்றத்திற்கான காரணமாக மாறிவிடும்.**

# எறும்புகளிடமிருந்து...!

**இராதாகிருஷ்ணன்**





இயற்கையில் எதுவுமே தன்னிச்சையாக இயங்குவதில்லை. மனிதன் உள்பட அனைத்து உயிரினங்களும், மரம், செடி, கொடிகள் அனைத்துமே ஒன்றை ஒன்று சார்ந்துதான் இயங்குகின்றன. மரம் வெளியிடும் காற்றைத்தான் நாம் சுவாசிக்கிறோம். தாவரங்கள் தரும் உணவைத்தான் நாம் உண்கிறோம்.

நாம் ஆரோக்கியமாக இருக்க, தாவரங்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். தாவரங்கள் ஆரோக்கியமாக இருக்க, மண் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். மண் ஆரோக்கியமாக இருக்க, அதற்குள் இருக்கும் நுண்ணுயிர்களும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும்.

இப்படி, இப்பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்று சார்ந்தவையாக உள்ளன. மிகப் பெரிய யானையாக இருந்தாலும், மிகச் சிறிய எறும்பாக இருந்தாலும் இயற்கையை ஆரோக்கியமாக வைப்பதில் ஒவ்வோர் உயிரினத்துக்கும் ஒரு முக்கியப் பங்கு உண்டு.

எளிதாகவும், இயல்பாகவும் நம்மிடையே பழகும் சிறு உயிரினம் எறும்பு. இந்தப் பூமிப்பந்தில், அனைத்து இடங்களிலும் உள்ள மிகச் சிறிய உயிரினமான எறும்பு, மனிதர்களுக்கு பல உண்மைகளைப் போதித்து வருகிறது. ஆனால், அவற்றை நாம் கவனிக்காமல் மிதித்து விட்டு கடந்து செல்கிறோம்.

இம்மண்ணில் எறும்புகள் 10 கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருகின்றன. டைனோசர்கள் வாழ்ந்த காலத்திலிருந்து எறும்புகள் இனம் இன்று வரை நம்மோடு பயணிக்கின்றன. உலகில் மிகவும் பழைமை வாய்ந்த உயிரினம் எறும்புகள்.

எட்வர்ட் ஆஸ்போர்ன் வில்சன் என்னும் நுண்ணுயிர் ஆய்வாளர், தனது 'உலகத்தை இயக்கும் சிறிய உயிரினங்கள்' என்ற ஆய்வுக் கட்டுரையில், 'மனிதர்களுக்கு எறும்புகள் தேவை. ஆனால், அவற்றுக்கு நாம் தேவையில்லை. முதுகெலும்பில்லாத சிறு உயிரினங்கள் அழிந்துவிட்டால், மனித இனம் சில மாதங்கள்கூட வாழ முடியாது' என்கிறார். மேலும் அவர், 'மனிதனுக்கு அடுத்து எறும்பினங்களில்தான் மிகநுட்பமான சமூகக் கட்டமைப்பு உள்ளது' என்கிறார்.

இத்தனை சிறிய உயிரினத்திடத்தில் காணப்படும் சுறுசுறுப்பும், கடின உழைப்பும், ஒற்றுமையும், ஒத்துழைப்பும், ஒழுக்கமும், சேமிக்கும் பழக்கமும் மனிதர்களுக்குப் பெரும் வியப்பூட்டி, பல உண்மைகளைப் போதிக்கின்றன. நூற்றுக்கணக்கில் இவை ஒன்று திரண்டு, ஒற்றுமையாக உழைத்து மாளிகைபோல் புற்றுகளைக் கட்டுகின்றன. அந்த உழைப்பை அறியாத நாம் சில நேரங்களில் அந்தப் புற்றுகளையும் உதைத்து விட்டுச் செல்கிறோம்.

"எறும்புகள் எப்போதும் கூட்டமாகத்தான் வாழும். உணவு தேட எறும்புகள் செல்லும்போது, 'ஃபெர்மோன்' என்னும் இரசாயனத்தைசுரந்தவண்ணம்செல்கின்றன. இதன் மூலம் முன் சென்ற எறும்பின் இரசாயனத்தை, அதன் பின்வரும் எறும்புகள் நுகர்ந்து நேர்க்கோட்டில் வரிசையாகப் பயணிக்கின்றன. இந்த 'ஃபெர்மோன்' என்னும் இரசாயனம் எறும்புகள் ஒன்றுடன் ஒன்று தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் உதவுகின்றன" என்கிறார் ஜீன் லுட்யி என்னும் பெல்ஜியம் நுண்ணுயிர் ஆய்வாளர்.

எறும்புகள் சமூகங்களாக வாழ்ந்து, குழுக்களாக வேலைகளைச் செய்கின்றன. ஒரு புற்றிலுள்ள எறும்புகள், தமது கூட்டத்தின் மற்ற எறும்புகளை எளிதாக அடையாளம் கண்டுகொள்கின்றன. எறும்புகள் கூட்டம் மெகா நகரத்தையே உருவாக்கும் தன்மை படைத்தவை என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

எறும்புகள் இனத்தில் மிகவும் பழைமையானது, 'இலை வெட்டி எறும்புகள்'. இது பூமியில் 1 கோடியே 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. ஆனால், மனித இனம் தோன்றியது 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்தான். இலைகளை வெட்டுவதால் இந்த எறும்பை, 'இலை வெட்டி எறும்பு' என்று அழைக்கிறார்கள். இந்த எறும்புகள் இலைகளை வெட்டிய உடனேயே அப்படியே உண்ணாமல், புற்றுக்குள் ஓரிடத்தில் இலைகளைச் சேமித்து வைக்கின்றன. அந்த இலைகளின் மீது வேதித் திரவத்தைச் சுரக்கின்றன. சில நாள்களில் இலைகள் மட்கி, அதில் பூஞ்சை உருவாகும். அந்தப் பூஞ்சைகளைத்தான் இலை வெட்டி எறும்புகள் உண்கின்றன. அதனால்தான், இந்த எறும்புகளை 'விவசாயிகள்' என நுண்ணுயிர் ஆய்வாளர்கள் அழைக்கின்றனர்.

இந்த வகை எறும்புகள் பூமிக்கு அடியில் 6,500 சதுர அடியில் கூடுகளைக் கட்டி வாழ்கின்றன. மண்ணுக்கு வளம் சேர்க்கின்றன. இப்படி நம் மண்ணை வளமுள்ளதாக்குவதிலிருந்து, பறவைகளுக்குத் தேவையான உணவுகள் கிடைப்பதை உறுதி செய்வதுவரை, எறும்புகளின் பங்களிப்பு மிக முக்கியமானது.

எறும்புகள் இயல்பிலேயே மண்ணின் தன்மையை மாற்றுபவை. உணவு தேடி நிலத்தின் மீது மட்டுமல்ல, அடியிலும் சென்றுவரும் எறும்புகள் அடியிலுள்ள செழிப்பான மண்ணை மேலே கொண்டு வருகின்றன. அவற்றின் கூட்டில் சேமிக்கப்படும் மக்கும் உயிரினங்கள் மண்ணுக்கு உரமூட்டுகின்றன. எனவே, மண்புழுவிற்கு அடுத்தபடியாக எறும்புகளும் விவசாயிகளின் நண்பனாக உள்ளன.

எர்னெஸ்ட் ஹெமிங்வே எழுதிய 'எ ஃபேர்வெல் டு ஆர்ம்ஸ்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவான திரைப்படத்தில் , இறப்பிலிருந்து யாராலும் தப்பிக்க முடியாது என்பதை உணர்த்துவதற்காக, அப்படத்தின் கதாநாயகன் எறும்புகளை நெருப்பிலிட்டும், தண்ணீரில் மூழ்கடித்தும் கொல்வார். இக்காட்சியைக் கண்டு கண்கலங்காதவர்களே இல்லை.

நகரமயமாக்கல், இரசாயனங்களின் பயன்பாடு, பருவநிலை மாற்றம் போன்ற காரணங்களால் விவசாயத்துக்குப் பயன்படும் பல பூச்சியினங்கள் அழிந்து வருகின்றன. இதில் எறும்புகளும் விதிவிலக்கல்ல. மனிதன் தன்னுடைய சொந்த நலனைப் பாதுகாக்க நினைத்தால், எறும்புகள் உள்ளிட்ட பூச்சியினங்களை அழிவிலிருந்து காப்பாற்றவேண்டும்.

'துயருகின்ற உயிர்கள் அனைத்தையும் நினைத்து, அவர்களின் துன்பங்களையும், துயரங்களையும் கற்பனையில் நீ அனுபவிக்கவேண்டும். அதன் மூலம் அவை மீது ஆழ்ந்த கருணையை உன் உள்ளத்தில் ஏற்படுத்தவேண்டும்' என்கிறார் புத்தர். மனிதகுலத்தின் சிறப்பு தானும் வாழ்ந்து, சமுதாயமாக வாழ்ந்து, மற்ற உயிரினங்களுடன் இயைந்து வாழ்வதில்தான் அமைந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச தாய்மொழி தின நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர்)

கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களின் பேரில் சர்வதேச தாய்மொழி தினமான பெப்ரவரி 21 ஆம் திகதி 'அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான மொழி' எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது கமு/கமு/ அல்- ஜலால் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ட.கே.எம். சிராஜ் தலைமையில் சர்வதேச தாய்மொழி தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன் போது தாய் மொழியின் முக்கியத்துவம் மற்றும் ஏனைய மொழிகளை மதிக்கும் தன்மை தொடர்பில் பிரதி அதிபர் எம்.ஏ.எம். சிராஜால் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களின் விசேட பேச்சு நிகழ்வுகளும் இடம்பெற்றது. இதன் போது பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# நீதிமன்றத்தினுள் துப்பாக்கிச் சூடு; கண்டித்து வவுனியாவில் பதாகை

கொழும்பு நீதிமன்றில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்கு கண்டணம் தெரிவித்து வவுனியா மேல் நீதிமன்றம் முன்பாக பதாதை காட்சிப்படுத்தப்பட்டது.

வெள்ளிக்கிழமை காட்சிப்படுத்தப்பட்ட குறித்தபதாதையானது அகிலஇலங்கைநீதிமன்ற ஊழியர்சங்கத்தால்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதில், திறந்த நீதிமன்றத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டு பிரயோகத்தை வன்மையாக கண்டிக்கிறோம். கௌரவ நீதிபதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் உயிருக்கு உத்தரவாதம்



இல்லையா..? என அப் பதாதையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 100

# மருத்துவ பீடம் மற்றும் விவசாய பீடங்களை தென்கிழக்கு பல்கலையில் ஆரம்பியுங்கள்

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மிக நீண்ட நாள் தேவையாகவும் கோரிக்கையாகவும் இருந்து வருகின்ற மருத்துவ பீடமொன்றை அமைப்பதற்காக ஒவ்வொரு அரசாங்கத்திடமும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவந்திருந்தாலும்இது



வரைஎதுவிதநடவடிக்கைகளும்முன்னெடுக்கப்படவில்லையெனவும் இந்த அரசாங்கமாவது இது விடயம் குறித்து கவனமெடுக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வியாழக்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்தவருடத்திற்கானவரவு-செலவுத்திட்ட வாசிப்பின் மீதான விவாதங்களின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார், குறித்த வரவு - செலவுத் திட்டத்தில்மிககுறைந்தளவிலானஒதுக்கீடுகளே கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் அதிக தேவைகளை கொண்ட மாகாணமாக கிழக்கு மாகாணம்காணப்படுவதாகவும் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டிப்பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும்உரையாற்றுகையில்- தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் பிரதேசமானது விவசாயத்திற்கு பெயர் போன பிரதேசமாக காணப்படுவதால் இப்பல்கலைக்கழகத்திற்கு விவசாய பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறித்த வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்தின் தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அதிக ஒதுக்கீடுகளை செய்து தருமாறும் கேட்டுக்கொண்டார்.



# சிறந்த சமூக சேவவையாளரை இழந்து நிற்கும் தமிழ்ச் சமூகம்

## எஸ்.பி.சாமியின் மறைவுக்கு நீதியரசர் விக்னேஸ்வரனின் இரங்கல்

பிரபல தொழிலதிபர் எஸ்.பி.சாமி அவர்களின் மறைவு தமிழ்ச் சமூகத்திடம் இருந்து ஒரு சிறந்த சமூக சேவையாளரை அபகரித்துச் சென்றுவிட்டது என்று தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டிருக்கும் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனது நீண்டகால நெருங்கிய நண்பரான எஸ்.பி.சாமி வர்த்தகத்துறையில் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து பல நிறுவனங்களை ஆரம்பித்து வெற்றிகரமான தொழிலதிபராக

விளங்கியவர். அச்சுத்துறை தொடங்கி சினிமா தயாரிப்பு வரை அவர் தனது திறமையைக்காண்பித்து சாதனை படைத்தவர். தனது கடைசிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அவர் நிறுவிய

வைத்தியசாலை இன்று வடக்கில் மிகப்பெரிய தனியார் மருத்துவ நிறுவனமாக விளங்குகிறது.

எவ்வளவுஉயரப் பறந்தாலும் அவரின் கால்கள் நிலத்திலேயே வேரூன்றி இருந்தன. அன்பும், பண்பும், பணிவும் அவரின் இயல்பான குணங்களாக மிளிர்ந்தன.

நண்பர் எஸ்.பி.சாமி வர்த்தகத்துறையில் மாத்திரமல்ல சமூக, சமய சேவைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். தலைநகர் கொழும்பிலும் வடக்கிலும் பல்வேறு சமூக அமைப்புக்களில்

தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய அவர் தனது செல்வத்தை நலிவுற்ற மக்களின் நலன்களுக்காக தாராளமாகத் தந்து உதவினார்.

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் எஸ்.பி.சாமி ஆரம்பித்த தினக்குரல் பத்திரிகை இன்று இலங்கையின் முன்னணி தேசிய தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றாக விளங்குகின்றது. தலைநகரில் மாத்திரமல்ல தினக்குரலின் பிராந்திய பதிப்பாக

யாழ்ப்பாணத்திலும் பத்திரிகையைத் தனியாக வெளியிட்டு குடாநாட்டை வெளியுலகத்திற்கும் வெளியுலகை குடாநாட்டுக்கும் காண்பிக்கும் அரிய சேவையையும் சாமி அவர்கள் செய்தார்.

அவர் முழுமையான வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து சென்றிருக்கின்றார். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த

அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

# மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு தமிழ்ப் பாடசாலைகளுக்கு விடுமுறை

## கிழக்கு ஆளுநரும் அறிவிப்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் மஹா சிவராத்திரி தினத்திற்கு மறுநாள் வியாழக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர அறிவித்துள்ளார். வடக்கில் ஏற்கனவே விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது கிழக்கிலும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கான பதில் பாடசாலையானது 01.03.2025 சனிக்கிழமை நடைபெறும் எனவும் அத்துடன் கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் வழமை போல நடைபெறுமெனவும் தெரியப்படுத்தியுள்ளார். இதனை கிழக்கு மாகாண ஆளுனரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# சாய்ந்தமருது சுகாதார வைத்திய பிரிவில் மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

(பாறுக் ஷிஹான்)




சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கருப்பை கழுத்து புற்று நோய் தடுப்பூசியும் , தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஏரிடி எனப்படும் வளர்ந்தோருக்கான ஏற்புத்தடை தடுப்பூசியும் ஏற்றும் நடவடிக்கைகள் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதேவேளை அப் பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கது.

# நஜீபுக்கு பிரியாவிடை

(சியாஜ்)

புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் என்.எம்.எம் நஜீபை பாராட்டி கௌரவிக்கும் முகமாக புத்தளம் தெற்கு கோட்டக் கல்வி காரியாலய அதிபர் மற்றும் ஆசிரிய ஆலோசகர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த பிரியாவிடை வைபவம் முந்தல் சுமுது மண்டபத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் புத்தளம் வலய கல்விப் பணிப்பாளர் ஏ.எச் அர்ஜுன, புத்தளம் வலய நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜீவிகா சந்திரசேகர, புத்தளம் தெற்கு கோட்டக் கல்வி பணிப்பாளர் நவுஸாத் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





# சான்றிதழ் பரீட்சை

(சியாஜ்)

புத்தளம் பாத்திமா அஹதிய்யா பாடசாலையிலிருந்து இடைநிலை தேசிய சான்றிதழ் பரீட்சைக்கு சனிக்கிழமை தோற்றவுள்ள மாணவிகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு புத்தளம் பாத்திமா அஹதிய்யா அதிபர் பீ.டி மபாஹிராவின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் திருமதி யஸீகா மற்றும் முன்ஸிரா ஆகியோர் மாணவிகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்கியதுடன் முதன் முறையாக அஹதிய்யா இடைநிலை தேசிய சான்றிதழ் பரீட்சை நிலையமாக புத்தளம் பாத்திமா பெண்கள் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளமை பற்றிய தெளிவூட்டலும் அஹதிய்யா பாடசாலை அதிபர் பீ.டி மபாஹிராவால் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் தாக்கி முதியவர் சாவு

கிளிநொச்சி அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட மணியம்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி முதியவர் உயிரிழந்தார்.

நெல்வயலுக்கு போடப்பட்ட மின்குமிழ் வயர் நெல் அறுவடை செய்த பின்பு வயலுக்கு வைக்கப்பட்ட நெருப்பின் மூலம் வயர் அறுந்த நிலையில் குறித்த மின்சாரம் தாக்கியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். 86 வயதுடைய முதியவரே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். 113

# வர்த்தகத்துறை, ஊடகத்துறை மாத்திரமல்ல சமூக, சமய சேவைகளிலும் தடம் பதித்தவர்

## ஊடக நிறுவனத் தலைவர் எஸ்.பி.சாமிக்கு அனுதாபம்

(அபு அலா)

தொழில்துறையிலும், பத்திரிகைத்துறை யிலும் சிறந்த முன்னோடியாக இருந்த தொழிலதிபரும் 'தினக்குரல்' நாளிதழின் நிறுவுநருமான எஸ்.பி.சாமியின் மறைவு அவருடைய குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், 'தினக்குரல்' குழுவிற்கும் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்று திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் விவேகப் பார்வை ஊடக ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எம்.முபீன் தனது அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அவர் தெரிவித்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

அரசியல் பிரமுகர்களோடும் ஊடகவியலாளர்களோடும், வர்த்தக சமூகத்தவர்களோடும் எவ்வித பாரபட்சமுமின்றி சமநிலையைப் பேணிய பெருந்தகையாளராகத்தான் மறைந்த எஸ்.பி.சாமி ஐயாவைப் பார்க்கின்றோம்.

அவரின் அயராத முயற்சியின் பயனாக, வர்த்தகத்துறை மற்றும் ஊடகத்துறை மாத்திரமல்ல, சமூக, சமய சேவைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். தலைநகர் கொழும்பிலும் வடக்கிலும் பல்வேறு சமூக அமைப்புக்களில் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய அவர் தனது செல்வத்தை நலிவுற்ற மக்களின் நலன்களுக்காக தாராளமாகத் கொடுத்து உதவினார்.

சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் எஸ்.பி.சாமி ஆரம்பித்த 'தினக்குரல்' பத்திரிகை இன்று இலங்கையின் முன்னணி தேசிய தமிழ்ப் பத்திரிகைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விவேக ஊடக ஒன்றியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கனமூலை பாடசாலைக்கு ஒலிபெருக்கி வழங்கிவைப்பு

(சியாஜ்)

புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நீண்ட நாள் பாடசாலையின் வெளிக்கள செயற்பாட்டிற்கான தேவையாக காணப்பட்ட ஒலி பெருக்கி சாதனம் பற்றிய கோரிக்கை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் பாடசாலையின் பழைய மாணவரும் றீமாஸ் கடை உரிமையாளருமான சியாதிடம் முன்வைக்கப்பட்ட தை அடுத்து அவர் தனது சொந்த நிதியின் மூலம் ஒலி பெருக்கி சாதனத்தை பெற்று பாடசாலை அதிபர் பீ.எம். முஸ்னியிடம் கையளித்தார்.





காலைக்கதிர்
Kalaikkathir

## கொலைகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு, நீதிபதிகளின் பாதுகாப்பு சிவில் அமைப்பினரின் பாதுகாப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பு தொடர்பில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் முறையான வேலைத்திட்டம் ஒன்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

நாளுக்குநாள் இந்தக்கொலைசம்பவங்கள் தொடர்ந்து செல்கின்றன. மனிதகொலை கலாசாரம் அதிகரிக்கப்படுகின்றன. அதனால் இதனை தாமதிக்க முடியாது. இதனால் பிள்ளைகள் மற்றும் ஒட்டுமொத்த சமூகமும் கடும் அச்சத்துக்கு ஆளாகின்றன. அதனால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எதிர்வரும் திங்கட்கிழமையாவது முறையான வேலைத்திட்டம் ஒன்றை நாடாளுமன்றத்துக்கு முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதுதொட ர்பில் அரசாங்கம் வழங்கும் பதிலை எதிர்பார்த்து இந்த சபை கலரியில் சட்டத்தரணிகளும் வந்திருக்கிறார்கள். எனவே அரசாங்கம் தொடர்ந்தும் தாமதிக்காமல் மக்களின் பாதுகாப்புக்காக எடுத்திருக்கும் நடவடிக்கையை பாராளுமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்றார்.

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10ஃ விலாயத் அஸ் செய்லானி
11. கனேடிய தமிழர் தேசிய அவை
12. தமிழ் இளைஞர் அமைப்பு
13. டருல் ஆதர் அத்தபவியா
14. இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம்
15. சேவ் த பேர்ள்ஸ்

ஆகிய அமைப்புக்களே தடை செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, தனிநபர்கள் பலரும் இந்தப் பட்டியலில் தடைசெய்யப்பட்டவர்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.

## நீதியும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின் ஊடாக பெரும் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2015 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 58 சதவீதமளவில்தான் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒதுக்கீடுகளின்செயலாற்றுகையைவிளங்கிக் கொள்ளமுடியும்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. தேசியமக்கள்சக்திக்குவடக்குமாகாணமக்கள் பெருமளவில் வாக்களித்தார்கள். ஆனால் மொத்தவரவுசெலவுத்திட்டத்தில்6சதவீதமான அளவுதான் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வரவு, செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடுகள் வரவு, செலவுத் திட்ட பதிவுகளில்இருக்கும். ஆனால்நடைமுறையில் ஏதும் நடக்காது. குறைந்தளவான நிதியை ஒதுக்கிவடக்குமாகாணமக்களைஏமாற்றலாம் என்று தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நினைக்கக்கூடாது.

வடக்கு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். காணாமல் போனோரின் உறவுகள் 2,900 நாட்களைக் கடந்து போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இந்த விடயத்துக்கு ஒரு முன்மொழிவைக்கூட இதுவரையில் முன்வைக்கவில்லை.

இந்த நாட்டில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லையென நீதியமைச்சர் குறிப்பிடுகிறார். பட்டியலைதருமாறு என்னிடம் கேட்கிறார். இந்த நாட்டில் நான் நீதியமைச்சரா அல்லது அவர் நீதியமைச்சரா, வடக்கில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் பொறிமுறை வகுக்கப்படவில்லை.

அபிவிருத்திகளைச் செய்து இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்று கருத வேண்டாம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கோடிக்கணக்கில் அபிவிருத்திகளைச் செய்தார். ஆனால் அவரால்கூட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை. நிலையான அரசியல் தீர்வு ஊடாக மாத்திரமே எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தக்க பதில் ஆளும்தரப்புக்குக் கிடைக்கும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வரை புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து அவதானம் செலுத்த முடியாது என்று குறிப்பிடப்படுகிறது. புதிய அரசமைப்பை உருவாக்காமல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேசிய மற்றும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் முன்னேற முடியாது.

தேசிய உற்பத்தியை மேம்படுத்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயின் எமது மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு வர்த்தமானி அறிவித்தல் ஊடாகத் தீர்வினை தாருங்கள். பசுக்கள் கொலை செய்யப்படும் அச்சுறுத்தலுக்கு மத்தியில்தான் எமது மக்கள் பண்ணைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

வரவு, செலவுத்திட்டத்தில் புதிதாக 'பிம்சவிய' திட்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு காலப்பகுதியின் வனவளத்துறை வரைப்படத்தை அமுல்படுத்தினால் எமது மக்களின் காணி பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொல்லியலாளர்கள் எமது மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ளார்கள். இந்த ஆளும்தரப்பின் காலத்திலும் இந்த நிலையே காணப்படுகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து தேசிய மக்கள் சக்தி வழங்கிய வாக்குறுதி மீது நம்பிக்கை கொண்டே வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இந்த ஆளும்தரப்புக்கு ஆதரவு வழங்கினார்கள். புதிய அரசமைப்பு உருவாக்கத்தை ஆளும்தரப்புக் கிடப்பில் போட்டுள்ளது. தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தது தவறு என்பதை வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெளிப்படுத்துவார்கள் என்றார்.

## நாகைக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலானது மதியம் காங்கேசன்துறையை வந்தடைந்தது. 83 பயணிகள் குறித்த கப்பலில் அங்கிருந்து வருகைதந்ததுடன் 83 பேர் இங்கிருந்து சென்றனர்.

பிற்பகல் 1.30 அளவில் காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை தொடங்கியகப்பல்மாலையில்நாகபட்டினத்தை சென்றடைந்தது. இந்தப் பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையானது செவ்வாய்க் கிழமை தவிர்ந்து வாரத்தின் 6 நாட்களும் இடம்பெறும் என சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் தெரிவித்துள்ளார்.

## ராஜபக்சக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர் ராஜபக்சர்களுக்காகவே அரசியல் செய்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ராஜபக்சக்களுக்கு எதிராகச் செயற்பட்டார். ஆகவே அக்கொலை குறித்து முறையாக விசாரணைகளைமேற்கொள்ளவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய பாதுகாப்புக் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். இந்த ஒரு வாரத்துக்குள் பல இடங்களில் துப்பாக்கிச்சூட்டுசம்பவங்கள் பதிவாகியுள்ளன. கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சந்தேகநபர் படுகொலை செய்யப்பட்டார். மித்தெனிய பகுதியில் தந்தை உட்பட இரண்டு சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். வெள்ளிக்கிழமை இரவு கொட்டாஞ்சேனை பகுதியில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவைதேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாதா என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

செவ்வாய்க்கிழமை (20) இரவு மித்தெனிய பகுதியில் 'கஜ்ஜா' என்றழைக்கப்படும் அருண விதானகே மீதும் அவரது இரண்டு பிள்ளைகள் மீதும் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தசம்பவத்தில் மூவரும் உயிரிழந்துள்ளனர். இரண்டு சிறுபிள்ளைகளின் இறப்புக்காக வருத்தமடைகிறேன். தந்தையின் தவறினால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அருண விதான என்பவர் 2022 காலப்பகுதியில் போராட்டத்தின்போது போராட்டகாரர்களுக்கு எதிராகச் செயற்பட்டார். மெதமுல்ல பகுதியில் ராஜபக்சவின் உருவச்சிலையைஉடைத்துபோராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டபோது இவர் ரி--56 ரக துப்பாக்கியுடன் அப்பகுதிக்கு வந்து சுட்டார்.

இதனால் இருவர் உயிரிழந்தனர், இருவர் காயமடைந்தனர். இருப்பினும் அவருக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. இந்த நபர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும், ராஜபக்ச குடும்பத்துக்கும் சார்பாகவே செயற்பட்டார். அவர்களுக்காகவே அரசியல் செய்தார். கடந்த ஜனாதிபதித்தேர்தலின்போது ராஜபக்சக்களிடம் இருந்து விலகி பிறிதொரு அரசியல் கட்சிக்கு சென்றார். பின்னர் ராஜபக்சக்களுக்கு எதிராகச் செயற்பட்டார்.

ராஜபக்சக்கள் தொடர்பான இரகசியங்கள் வெளிவரும் என்ற அச்சத்தில் இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. ஆகவே கஜ்ஜாவின் கொலையில் மர்மம் உள்ளது. இந்தவிவகாரத்தை ஆளும்தரப்பு முறையாக விசாரணை செய்ய வேண்டும் என்றார்.

# சமூக சேவைக்கான விருதுகள் வழங்கல்

*(சுபேசன்)*

*யாழ்.பல்கலைக்கழகத்தில் 'வாழும் போதே வாழ்த்துவோம் - பசுமையை நேசிப்போம்' செயற்திட்டத்தின்கீழ்சர்வதேச மனிதஉரிமைகள்உலகளாவிய பணி நிறுவனத்தினால் சமூகசேவைக்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றிருந்தது.*

*இதன்போது பெர்ண தேத்தம்மா அறக்கட்டளை வாழவைப்போம் கனடா அமைப்பின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் யோசப்பின்சமூகவேவையைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார்.*

*இந் நிகழ்வில் மேலும் பலருக்கு சமூக சேவைக்கான கௌரவம் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*





## வெப்பக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவளிமண்டலவியல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் வெப்பநிலை மனித உடலால் உணரப்படும் அவதானமட்டத்தில்இருப்பதாகதிணைக்களம் அறிக்கைஒன்றைவெளியிட்டுஅறிவித்துள்ளது.

இதன் காரணமாக, மக்கள் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுக்க வேண்டும் என்றும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மக்கள் வெள்ளை அல்லது வெளிர் நிற, இலகுரக ஆடைகளை அணிய வேண்டும் என்றும், கடுமையான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச தாய்மொழி தினக் கடுரைப் போட்டியில் ஆலங்குடா பாடசாலை மாணவி அஸ்கா 2 ஆமிடம்

(சியாஜ்)

சர்வதேசதாய்மொழிதினத்தை முன்னிட்டுஇடம்பெற்றகட்டுரை போட்டியில்புத்தளம்ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி மொஹமட் முஸாதீக் பாத்திமா அஸ்கா இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான பரிசளிப்பு வைபவம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் ஹருணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றதும்குறிப்பிடத்தக்கது.






# ‘பெண்கள் அரசியலில்’ விழிப்புணர்வு நாடகம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் மற்றும் தம்பலகாமம் பிரதேசங்களில்இலங்கைஉள்ளூராட்சி மன்றங்களின்சம்மேளனத்தின் ஏற்பாட்டில், ’பெண்கள் அரசியலில்’ எனும் தலைப்பில் வீதி நாடகங்கள் இளைஞர் குழாத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர்களின் பங்களிப்புடன், பெண்களின் அரசியல் பங்குபற்றலின் அவசியத்தை மக்களிடையே விழிப்பூட்ட இந்த நாடகங்கள் வடிவமைக்கப்பட்டன.

பழைமையான பாரம்பரியச் சிந்தனைகள், பாலினத்திற்கிடையேயான சவால்கள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள் குறித்து சிந்திக்கத் தூண்டும் வகையில் இவ்வீதி நாடகங்கள் அமைந்திருந்தன.

நாடகம் நடைபெற்ற இடங்களில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு நாடகங்களை கவனித்ததோடு, பெண்கள் அரசியலில் பங்கெடுப்பது குறித்து தங்கள் கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டனர்.

பெண்கள் சமூகத்தில் முடிவெடுக்கும் அதிகார நிலையங்களில் பங்கேற்பதை உறுதிபடுத்த எதிர்காலத்திலும் இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# கற்பிட்டி மஹ்தி பவுண்டேஷனின் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(சியாஜ்)

கற்பிட்டி மஹ்தி பவுண்டேஷனின் கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் செயற்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி நகரில் இனம் காணப்பட்ட வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக இடம்பெறும் நான்காவது நிகழ்வு கற்பிட்டி தேத்தாவாடி கிராமத்தில் தக்கிய்யா பள்ளிவாசலில் தலைவர் எச்.எம் சிபான் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மஹ்தி பவுண்டேஷன் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில், தில்லையூர் மீனவ சங்கத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான சபுறுல்லாஹ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர் Kalaikkathir

# பருத்தித்துறை முதல் பொத்துவில் சைக்கிள் பயணத்துக்கு வரவேற்பு

பருத்தித்துறை முதல் பொத்துவில் வரையான விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்தின் நிறைவு கட்டத்தை சமூக மாற்றத்துக்கான முன்னோடி செயற்பாட்டாளர் வ. க. செ. மீராபாரதி நெருங்கி உள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை காரைதீவை வந்தடைந்த இவருக்கு காரைதீவு ஸ்ரீசிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் வைத்து மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இயற்கையோடு இணைந்த வாழ்வியலின் அவசியத்தை குறைந்தது பத்து லட்சம் மக்களுக்கு போதிக்கின்ற வேலை திட்டத்தை முன்னெடுத்து வருகின்ற விழிப்பூட்டல் செயற்பாட்டாளரும், சாதனை மாணவியுமான சம்மாந்துறையூர் மின்மினி மின்ஹா நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

சமூக மாற்றத்துக்கான முன்னோடி செயற்பாட்டாளர் மீராபாரதி அடங்கலாக நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் குடைச்சாமி சர்வமத பீடத்தின் ஸ்தாபகரும், தலைவருமான ஜீவாகரன் சுவாமிகள் ஆசிர்வாதம் வழங்கினார்.

பருத்தித்துறை முதல் பொத்துவில் வரையான அவருடைய விழிப்பூட்டல் பயணத்தின் நோக்கங்களை மீராபாரதி எடுத்துரைத்தார்.

சைக்கிள் பாவனை ஊக்குவிக்கப்பட வேண்டும், சைக்கிள் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், பாதுகாப்பான மிதிவண்டி பாதைகளை அரசாங்கம் அமைத்து தர வேண்டும், சைக்கிள் பாவனை செலவு குறைந்தது, சிக்கனம் நிறைந்தது, ஆரோக்கியமான வாழ்வியலுக்கு பொருத்தமானது, அற்புதமான உடற்பயிற்சி ஆகும், பொருளாதார



ரீதியாக நன்மை வாய்ந்தது மாத்திரம் அல்ல இயற்கை சுற்று சூழல் பாதுகாப்புக்கு உகந்தது, இச்சைக்கிள் விழிப்பூட்டல் பயணத்தின் மூலமாக வீட்டு தோட்ட செய்கை, பயன் தரும் பழ மரங்களின் நடுகை, உள்ளூர் உற்பத்திகளுக்கான ஊக்குவிப்பு ஆகியவற்றை குறித்த விழிப்பூட்டல்களையும் மக்களுக்கு வழங்குகின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

ஓய்வு நிலை பிரதி அதிபர் எஸ். தில்லையம்பலம், அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன், திடீர் மரண விசாரணை அதிகாரி த. தர்மேந்திரா, அழகுக்கலை நிபுணர் என். ஜெயகலா, அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டு பேரவையின் தலைவர் ஐ. எல். ஜலீல் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றார்கள்.

தொழிற்சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் இங்கு கருத்து கூறுகையில் உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் வாகனமாக சைக்கிள்தான் விளங்குகின்றது, மீராபாரதியின் விழிப்பூட்டல் சைக்கிள் பயணத்தை நாம் ஆதரிக்கின்றோம், அவருடைய நோக்கங்களுடன் ஒன்றித்து பயணிப்பவர்களாக உள்ளோம் என்றார்.

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி வெற்றி

(முஹம்மட் றிஸ்னாத்)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்ட பாடசாலைக்கிடையிலான 16 வயதிற்குட்பட்ட மாகாண மட்ட இறுதிப்போட்டி வெள்ளிக்கிழமை கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

இப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி அணியுடன் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி விளையாடியதில் 5:0 என்ற கோல் கணக்கு வித்தியாசத்தில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டியின்போது ஆகிப் என்ற மாணவன் 3 கோல்களுடனும் ஷயான், ஆமிர் தலா ஒரு கோல்களை அடித்து தனது அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

குறித்த போட்டியில் வெற்றியீட்டிய கிண்ணியா மத்திய கல்லூரி அணியின் பயிற்றுவிப்பாளராக



கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் என்.ஜே.எம். ஆசிக் என்பதும் குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# பாற்பண்ணையாளர்களைக் காக்க விசேட திட்டங்கள் அமுல்படுத்துக

## கோடீஸ்வரன் எம்.பி. கோரிக்கை

அம்பாறை, திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் பௌதீக மற்றும் ஆளணி பற்றாக்குறைக்கு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்வு வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளேன். பாற்பண்ணையாளர்களை பாதுகாப்பதற்கு விசேட திட்டங்கள் அமுல்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான 4 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது -

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலுவுத் திட்டத்தில் ஒருசில சிறந்த விடயங்களும் உள்ளக்கப்பட்டுள்ளன.இருப்பினும் திருத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. வரவு செலவுத் திட்டத்தின் முழுமையான ஒதுக்கீட்டுக்கு அமைய கிழக்கு மாகாணத்துக்கு ஒருசில அபிவிருத்திகள் கிடைக்கப்பெறும்.

ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் எவ்வாறான பங்கு அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கும் என்பது கேள்விக்குள்ளாகியுள்ளது. இந்திய அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி எந்தெந்த கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எந்தெந்த பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எந்தளவுக்கு எமது மக்களுக்கு பயனளிக்கும் என்பது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்திய அரசுக்கு இந்த சபையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்திய அரசு 75 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அம்பாறை திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்காக ஒதுக்கிய நிதியை கடந்த அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் தடுத்து நிறுத்தினார்கள். அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிக வளம் காணப்படுகிறது. ஆனால் திருக்கோவில் வைத்தியசாலைக்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் இந்த வைத்தியசாலைக்கு போதுமான நிதியை ஒதுக்கிக் கொடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

அம்பாறை மாவட்ட மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். பாற்பண்ணையாளர்களை பாதுகாக்க வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் உள்ள வட்டமடு 1976 ஆம் ஆண்டு மேய்ச்சல் தரையாக வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2010 ஆம் ஆண்டு வனவளத்திணைக்களம் மேய்ச்சல் தரையை இணைத்து எல்லை நிர்ணயம் செய்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாற்பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரை பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இந்த பிரச்சினைக்கு அரசாங்கம் உடன் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். - என்றார்.

# உசன் இராமநாதன் மகா வித்தியில் துடுப்பாட்ட ஆடுகளத்துக்கு அடிக்கல்

(சுபேசன்)

தென்மராட்சி உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் துடுப்பாட்ட ஆடுகளம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.



பாடசாலையின் பழைய மாணவனும் - ஐக்கிய இராச்சிய வைத்தியருமான வே.பரமநாதன் அவர்களுடைய நிதிப்பங்களிப்பில் மேற்படி துடுப்பாட்ட ஆடுகளம் அமைக்கப்படவுள்ளது.

அடிக்கல்நாட்டுவைபவத்தில் வைத்தியகலாநிதிவே.பரமநாதன், பாடசாலைஅதிபர்க.உமாபாலன், ஆசிரியர்கள்,மாணவர்கள்மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.02.2025இல் வெளியிடப்பெற்றது